சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், BLA2, BDA நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தியாகராயர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரை ஆற்றி கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் தியாகராயர் நகர் தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, கோ.சு.மணி, எஸ்.மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்;s ஆர்.காந்தி, பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (12.10.2025) காஞ்சிபுரத்தில் காஞ்சி காமாட்சியம்மன் திருக்கோயில், குன்றத்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவிடந்தை நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில், திருமலைவையாவூர், பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பிரித்தெடுக்கப்பட்ட 53 கிலோ 386 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் காஞ்சிபுரம் மண்டல மேலாளர் செந்தில்குமாரிடம் ஒப்படைத்தனர். உடன், மாண்பமை ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலெட்சுமி, இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, சி. குமரதுரை, துணை ஆணையர்கள் யர்கள் திருமதி கே. சித்ராதேவி, ஆர்.ஜெயா, உதவி ஆணையர்கள் ஆர். கார்த்திகேயன், ஆர். ராஜலட்சுமி, மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

வட்டச் செயலாளர் எம்.எல்.சரவணன் ஏற்பாட்டில்

திருவொற்றியூர் 9-வது வட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் – இரா.குமரேசன் பங்கேற்பு!

சென்னை, அக். 13 -

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின் பேரில், பகுதி கழக செயலாளர் தி.மு. தனியரசு ஆலோசனையின் படி, திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 9 வது வட்ட தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் எம்.எல்.சரவணன் ஏற்பாட்டில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், பகுதி பொருளாளர் இரா.குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினர்.

திருவொற்றியூர் சன்னதி தெருவில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் 9வது வட்ட தி.மு.க. சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வட்ட அவைத் தலைவர் எஸ்.கண்ணையன் தலைமையில் நேற்று (12.10.2025 ஞாயிற்றுக் கிழமை) காலை 11:30 மணி அளவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் பகுதி பொருளாளர் இரா.குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கி பேசினர்.

இக்கூட்டத்தில் பி.எஸ். சைலஸ், பி.ஜி.அவினாஷ், கோ. ரமேஷ், து.செங்குட்டுவன், பி.சுரேஷ், எஸ்.பிரகாஷ், டி. அமுதன், எஸ்.ஆர்.ஸ்ரீதர், செ.ச.குமரன், பி.உதயகுமார், ஜி.முத்துக்குமார், எஸ்.சரவணன், பிரேம் குமார், டி.சுதாகர், செளந்தரராஜன், கே.குணசேகரன், ஜி.வெற்றிவேல், எஸ். தமிழ்வாணன், ஆர்.நிஷா, ஜெ.ராஜ், ரஹ்மத்துல்லா, பி. நித்தியானந்தம், டி.கே.ஜோதி பிரியன், ராஜதுரை, பி.பலராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக இ.திருஞானம் நன்றி கூறினார்.

திருவேற்காட்டில் மாற்றுக் கட்சியினர் 500 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில்

திருவள்ளூர், அக் 13;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதி குட்பட்ட திருவேற்காட்டில் பாஜக கட்சியினர்கள் 500 பேர் விலகி திமுகவில் இணையும் நிகழ்ச்சி தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் திருவேற்காடு நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி வரவேற்புரையற்றினார்.

இந்நிகழ்ச்சியில் திரு வள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் பா.ஜ.க. மாநில செயற்குழு உறுப்பினரும், ஜெய் பாரத் மன்ச் என்ற அமைப்பின் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத் தலைவருமான பாரதிராஜா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளிலிருந்து விலகி 400க்கும் தி.மு.க.வில் இணைந்தனர்கள்.

தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் அமைச்சர் சா.மு.நாசர் இருவண்ண சால்வைகளை அணிவித்தார். பின்னர் அவர்கள் பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர் அட்டையை அமைச்சரிடம் கொடுத்தனர்கள்.

பா.ஜ.க.வில் இருந்து விலகி திமுகவில் இணைத்து கொண்ட அவர்கள் கூறும் போது,

தமிழ்நாட்டிற்கும் தமிழ் நாடு மக்களுக்கும் பாஜக ஒன்றிய அரசு தொடர்ந்து பல்வேறு தீமைகள் செய்து செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சியில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. மீண்டும் திமுக ஆட்சி அமைய அனைவரும் பாடுபடுவோம். தமிழ் நாட்டின் முதலமைச்சராக மீண்டும் மு.க.ஸ்டாலின் ஆட்சி அமைப்பார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின், அமைச்சர் நாசர், மற்றும் திமுக நிர்வாகிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர் எஸ்.சங்கர், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், நகர நிர்வாகிகள் ஜெ.சரவணன், இ. செல்லதுரை,

வார்டு செயலாளர்கள் எம்.காந்தி, குமார், சத்தியகிரி, பு.பரிசமுத்து, டி.வி. இளங்கோவன், நகர இளைஞர் அணி நிர்வாகிகள் அப்பு (எ) ஜெபராஜ், என்.ராஜ், ஆ.நாராயணன், நரேஷ், குடியரசு, வழக்கறிஞர் சதீஷ், ராஜ்குமார் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்

சென்னை - தியாகராயர் நகரில்

ஹோட்டல் விருதுநகர் செட்டிநாடு ரெஸ்டாரண்ட் திறப்பு விழா!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு - மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கின்றனர்!

சென்னை, அக். 13

ஹோட்டல் விருதுநகர் செட்டிநாடு ரெஸ்டாரண்ட் திறப்பு விழா இன்று (13.10.2025 திங்கட்கிழமை) மதியம் 12 மணியளவில், சென்னை, தியாகராயர் நகரில் உள்ள ஹோட்டல் விருதுநகர் செட்டிநாடு ரெஸ்டாரண்ட் திறப்பு விழா நடைபெறுகிறது.

சிறப்பு அழைப்பாளராக அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கண்டு திறந்து வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.எம். ஆருண் ரஷீத், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.அசன் மவுலானா, மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

விருதுநகர் குழுமத் தலைவர் எம்.இப்ராஹிம்ஷா அனைவரையும் வரவேற்கிறார்.

மதுராந்தகம் நகரக் கழக பாக முகவர்கள் கூட்டம்!

நகரச் செயலாளர் கே.குமார் தலைமையில்

மதுராந்தகம், ஆக். 13 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் நகரக் கழக பாக முகவர்கள், பிஎல்ஏ 2 முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (12.10.2025) காலை தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகரக் கழகச் செயலாளர் கே.குமார் ஒருங்கிணைப்பாளர்கள் சிவலிங்கம், ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டு நூறு வாக்குகளுக்கு ஒருவரை நியமித்து அந்த வாக்குகளுக்கான விவரங்களை சேகரிப்பது குறித்தும், வார்டுகளில் உள்ள வீடுகள் தோறும் எத்தனை ஓட்டுக்கள் திமுகவிற்கு மாற்றுக் கட்சிக்கு எத்தனை ஓட்டுகள் எந்தெந்த கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சரி பார்க்க வேண்டும் நடுநிலை வாக்காளர்கள் விபரம் உள்ளிட்டவற்றை சேகரிக்க வேண்டும் எனவும், கடந்த தேர்தல்களில் அதிக வாக்குகளைப் பெறக்கூடிய பூத்துகள், குறைந்த வாக்குகள் பதிவாகும் பூத்துகள் எவை அதற்குக் காரணம் என்னவென்று ஆலோசனை வழங்கினர்.

மேலும் பூத்துகளிலும் 50 சதவீதத்திற்கும் மேல் வாக்குகள் பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நகரக் கழக நிர்வாகிகள், வார்டுச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.